488

Regd. No. M. 1530

38

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

18 JAN 1924

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol V] MARCH 1923 [No. 3

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

x
LL,9Cm21',x14
M23·53
186462

...tion Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

All Rights reserved by the Publishers.

Vol. V. தொகுதி 5.	1923௵ மார்ச்சு௴	No. 3 பகுதி 3.

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
ஈசன் திருநாமமகிமை	65
ஸ்ரீ ராமாவதாரம்	67
நீதி	74
பொய்ம்மை	74
ஒரு புழுவின் கதை	75
பகல் தூக்கம்	79
மனத்தின் தத்துவம்	80
உலுத்தப் பிரபுவும் சங்கீத வித்வானும் ...	82
ஸநாதனமான தர்மம்	84
எவை பெரியவை?	85
கொடிது கொடிது வறுமை கொடிது ...	88
பெரியபெருமாள்	91
எனக்கும் கழுதைக்கும் ஒரு முழம்	93
திருக்குறள்	94
அறநெறி கும்மி	95

சித்திரப் படங்கள்.

(1) மோடிபாடி முருகனைத் துதித்தல்.

(2) விஸ்வாமித்ர யாகஸம்ரக்ஷணம்.

குறிப்பு.—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜெண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனால் ஒப்புக்கொள்ளப் பட மாட்டாது.

மோடிபாடி முருகனைத் துதித்தல் (66-ம் பக்கம் பார்க்க.)

சென்னை-600 008

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 5 | 1923௵ மார்ச்சு௴ | பகுதி 3

ஈசன் திருநாம மகிமை

முடியாப் பிறவிக் கடலிற் புகார் முழுதுங் கெடுக்கும்
மிடியார் படியில் விதனப்படார் வெற்றிவேற் பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமாளவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

—கந்தரலங்காரம்

186462

(மெட்டு) மோடி.

ஷண்முகம்—ஷண்முகம்—ஷண்முகம்—ஷண்முகம்
ஷண்முகம் சிவ—ஷண்முகம்.

(1) சரவணப்பூம் பொய்கையிலே,
கருணையோடு வந்தசூரர்
மாபழிய வேல்விடுத்த (ஷண்முகம்.)

(2) உலகமெலாம் ஒருநொடியில்,
வலம்வந்து மலைப்பழனித்
தலமிருந்து நலமுதவும் (ஷண்முகம்)

(3) பூதலமும் மீதலமும்,
போற்றிசெயப் போருரில்
நாதனென வந்தசிவ (ஷண்முகம்)

(4) வேலன் குகன் சீலன் சிவன்,
பாலனெனப் பாடித்தொழச்
சோலைமலை மேலமர்ந்த (ஷண்முகம்)

(5) கரங்குவித்துச் சிரங்குனிந்து,
கமலமலர்க் கழல்பணியப்
பரங்குன்றில் விளங்குஞ்சிவ (ஷண்முகம்)

(6) நேமமோடு நினதுதிரு
நாமம்நவில் வார்க்கருளச்
சாமிமலை மேவுஞ்சிவ (ஷண்முகம்)

(7) கந்தன்சிவ காமியுமை,
மைந்தனெனச் சந்ததமும்
சிந்தைசெயச் செந்திலமர் (ஷண்முகம்)

(8) வேதனுக்குச் சிறைவிதித்து,
நாதனுக்கு மறையுரைத்துப்
போததரு வானசிவ (ஷண்முகம்)

(9) வாகவிசுப் பிரமணியன்,
தருமினிய தமிழ்க்குகந்து
அருள்புரியுந் திருத்தணிகை (ஷண்முகம்)

(7) ஸ்ரீ ராமாவதாரம்

(38-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் தசரதேந்திரன் தனது பட்ட மகிஷியரைநோக்கி "இவ் வுலகத்தில் ஒருவனுக்கு (1) மனைமாட்சியே (2) மங்கலமென்று பெரியோர் கூறுகின்றனர். அந்த நலத்தை நான் உங்களால் அடைந்திருப்பது பற்றி மகிழ்ந்திருந்தேன். ஆனால் அந்த நலத்துக்கு (3) நன்கலமாகவும், குலத்தின் அபிவிருத்திக்கு ஆதாரமாகவும் ஏற்படக் கூடிய சந்தானவிருத்தியை நான் இதுவரையில் அடையாதிருந்த குறையானது "நாராயணாயநமவென்றவனடியைச், சேராதார் (ஐ) வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்" என்னைச் சேர்ந்து இரவும் பகலும் துன்புறுத்திவந்தது. அக்குறை இப்போது "மிக்கோனுலகளந்த மெய்யடியே சார்பாகப், புக்கோரருவினைபோற் போயிற்று." நமது அரண்மனையும், மனோகரம் பொருந்திய புஷ்பங்கள் மலரப்பெற்ற சோலைபோலும், உத்தமமான தாமரை விளங்கப்பெற்ற தடாகம்போலும், கண்ணுக்கினிய சந்திரனைக் காணப் பெற்ற கருங்கடல்போலும் விளங்குகின்றது. என் மன

---

(1) மனை மாட்சி-மனையாளின் நற்குண நற்செயல்கள். (2) மங்கலம்-நன்மை. (3) நன்கலம்-நல்ல ஆபரணம்.

மும் சாந்தி யடைந்திருக்கின்றது. மண்ணக வாழ்வையும் வானக வாழ்வையும் பூரணமாக அநுபவிக்கும் சுதந்தரத்தைக் கைப்பெற்று விட்டேன். இனியொரு குறையுமில்லை. பிள்ளைகளோ அறிவறிந்தவர்கள். சூரியகுலம் இவர்களால் பெரிதும் பிரகாசிக்கும்'' என்று சொல்லி ஆனந்த மடைந்திருந்தான்.

இச் சந்தர்ப்பத்தில் விசுவாமித்திர மகரிஷியானவர் அரசர் பெருமானைக் காணவந்தார். அவரது வரவுணர்ந்த வேந்தன், பிரமதேவனுடைய வரவைக்கண்ட இந்திரனைப் போல் எதிர்நோக்கிச் சென்றான்; முனிவரை மிகுந்த வந்தனை வழிபாடுடன் உபசரித் தழைத்துவந்தான்; பொன்மயமான உயர்ந்த ரத்னாசனத்தில் வீற்றிருக்கச் செய்தான்; பிறகு அவரை நோக்கி "அடிகளே! காலத்திற் பெய்யும் மழையே பூபாலரின் செங்கோலோங்குவதற்குக் காரணம். அத்தகைய மழை 1 'தவமிலா ரில்வழி யில்' என்கிறபடி தங்களைப் போன்ற மகரிஷிகளிருப்பதினாலன்றோ நிலைத்து வருகின்றது; அறமும் செழித்து வளர்கின்றது. யார்செய்த புண்ணியமோ ரிஷிசிரேஷ்டரான தங்களையான் தரிசிக்கப்பெற்றேன். தாங்களிங்கு வலிய எழுந்தருளப் பெற்றது இம்மண்ணுலகஞ்செய்த தவமாயிருக்கலாமோ? இராது. அதற்குத் தலைவன் யானல்லவா? என்னைவிட்டு உலகத்துக்குத் தங்களால் நேரேயாகக் கூடிய தொன்றுமில்லையே. ஆகையால் அடியேனுடைய பூர்வ புண்ணியமே காரணமாமென்று புலப்படுகிறது. ஆழ்ந்து பார்த்தால் அதுவும் காரணமாகாது. அந்த யோக்கியதைக்கு நானும்

(1) தபோதன ரில்லாவிடில் (மழை) இல்லை.

நேரே அதிகாரியாகமாட்டேன். 'குலத்தளவே யாகுங் குணம்' ஆதலின், யான் வலம்வந்து வணங்கும்படித் தேவரீர் வெளிவந்தது மூன்செய்த குலஞ்செய்த தவமேயாம்" என்று கூறினன்.

முனிவர் அவனுக்கு ஆசியளித்து வீற்றிருக்க ஆக்யாபித்து, புன்முறுவலுடன் "இராஜமார்த்தாண்டா! உன் பெருமையை நீ யறியாமலே பேசுகிறாய். கற்பகத் தருவின் குளிர்ந்த நிழற்கண் குடியிருந்து பொன் நாட்டையரசுபுரியும் படியான பெருஞ்செல்வம் தேவேந்திரனுக்கு யாரால் நிலைபெற்றது? நீ கிருபை செய்யாவிட்டால் அவனுடைய கதி இதுபரியந்தம் யாதாய் முடிந்திருக்கும்? அது கிடக்க, என்போன்ற தபோதனருக்கு ஏதேனும் துன்பம் நேரிட்டால் அவர்களைத்தான் ஆதரிக்க வல்லவர்யாவர்? பண்ணவர் வேந்தனா? பார்வதி காந்தனா? பங்கயவாசனா? 1 பதுமையின் நேசனா? அல்லது இவர்களுங் கைவிடுமொன்றைக் 2 கடைப்பிடித்து முடிக்கவல்ல அயோத்தியின் 3 ஈசனா? அந்தப் பாரதமேனிப்போது. நானொருயாகம் செய்யப்போகிறேன். அந்தயாகத்துக்கு 4 விக்கினம் புரிய அசுரர்கள் சித்தமாயிருக்கிறார்கள். யாகம் பூர்த்தியாகுமட்டும் யான் 5 தீட்சிதனா யிருக்க வேண்டியபடியால், அதற்குத் தடை செய்வோரைப் 6 புடைசெய்து காத்தருள உன் 7 அருமந்த மைந்தர்கள்

1-பதுமை-இலக்ஷ்மி; 2-கடைப்பிடித்தல்-உறுதியாகப் பற்றி நிற்றல்; 3-ஈசன்-தசரதன்; 4-விக்கினம்-கெடுதி; 5-தீட்சிதன்-எடுத்த காரியத்தை முடிப்பதில் நிலையான மனதுடையவனா யிருப்பவன்; 6-புடைசெய்து-நாசஞ்செய்து; 7-அருமந்த-அருமையான மருந்து (அமிர்தம்) போன்ற.

நால்வரில் கடல்நிற வண்ணனான ஸ்ரீராமனை என்பின் அனுப்பவேண்டும்" என்று கேட்டார்.

இந்த வார்த்தையானது தசரதன் செவியில் விழுந்ததும், பழுக்கக் காய்ச்சிய இரும்பு, புண்ணில் நுழைந்தால் எவ்வித வருத்தத்தை யுண்டுபண்ணுமோ அவ்விதத் துன்பத்தை அவனுக் குண்டுபண்ணிற்று. அவன் ஒருவாறு தேறி மகரிஷியைப்பார்த்து "சுவாமி! இராமன் இன்னுஞ் சிறுவன். ஆயுதப் பிரயோகத்தில் பயிற்சி படையவில்லை. தங்களுக்கு அசுரர்களாலே மாத்திரமன்று, மூத்தொழிற்குரிய கர்த்தாக்களினாலும் ஏதாவது இடையூறு நேருவதாயிருந்தாலும் அந்த இடையூற்றுக்கு இடையூறாய் நானே யிருந்து தங்கள் யாகத்தைக் குறைவின்றிக் காப்பேன். இந்தக்கணமே புறப்படலாம்" என்று சொன்னான்.

விசுவாமித்திரருக்கு இப்போது கோபமுண்டாகியது. "தசரதா! என்ன சொன்னாய்? இராமனை இன்னானென்று நீ அறியமாட்டாய். நானறிவேன்" என்று உறுத்து நோக்கினார். உடனே அரசன் மூர்ச்சித்தவனாய் அடியற்ற பனைபோல் 1 படியின்கண் வீழ்ந்தான். கண்ணற்றவன் கண்பெற்று அதனை உடனே யிழந்து விடநேர்ந்தால் அது அவனைப் 2 பாதியாமலிருக்குமா? எத்தனையோ காலம் புத்திர ஸம்பத்து இல்லாதிருந்தவனல்லவா தசரதன்? மகரிஷி பிள்ளையைத் தம்பின் அனுப்பச் சொன்னது நல்லெண்ணத்தாற்றானென்பது அந்த ஸமயத்தில் அவனுக்குப் படவில்லை. "அரக்கரின் கொடுமையை அகற்றுதற்கு இராமன் வல்லவனா? அவர்

1-படி-பூமி; 2-பாதியாமல்-வருத்தாமல்.

களோ 1 நிசாசரர். இராமனே தாமரைக்கண்ணன். இரவில் தாமரை குவிவதுபோல இராமன் தூங்கிவிடுவானே. இராக்ஷஸர் அப்போது அவனை என்ன செய்வார்களோ" என்கிற பயம் அரசனுக்குத் தோன்றிவிட்டது. அதனுல்அவன் சித்தப்பிரமை கொண்டனன்.

இப்படித்தரையில் வீழ்ந்த தார்வேந்தனை வசிஷ்டர் மூர்ச்சை தெளிவித்து "காவலரேறே! அவிவேகரைப் போல நீரிப்படி மனங் கலங்குவது வியப்புக் கிடந்தருகிறது. விசுவாமித்திரரை சாமானிய ரென்றெண்ணி விட்டீர். அவர் இராமனை உமது பாதுகாப்பினும் பதின்மடங்கு அதிகமாகவே பாதுகாக்கத் தக்கவர். உமது மைந்தனுக்கு அவர் வரவு நன்மையை விளைக்கவல்லதா யிருக்கிறது. அளவற்ற வித்தைகளில் உமது குமாரன் சீரடைவான். ஆகையால் அவனை அவருடன் கூட்டியனுப்பும் என்ருர்.

தசரதன் அவர் சொல்படி இராமனேடு இலக்ஷ்மணனேயும் வரவழைத்து அவர்களைத்தன் மார்பிறுகத் தழுவிக் கொண்டு பெரியவர்களிடம் அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய நியாயங்களைப் போதித்தான். பிறகு விசுவாமித்திரரிடம் அவர்களை ஒப்புவித்து "சுவாமி! தேவரீரே இவர்களுக்குத் தாயுந் தந்தையும். தங்களிஷ்டப்படி அவர்களை நடத்திக் கொள்ளலாம்" என்ருன். முனிவரும் அவர்களைத் தமது கண்போல் பாவித்து அழைத்துச் சென்ருர்.

செல்லும் போது வழியில் காணப் பெற்ற அங்க தேசத்தின் வரலாற்றை முனிவர் இராஜ புத்திரர்களுக்கு

1-நிசாசரர்-இரவில் சஞ்சரிப்பவர்.

சொல்லிக் கொண்டே போனர். அங்கதேச மென்பது காமனுச் சிரமம். சிவபெருமான் அங்கு ஒரு காலத்திற் செய்த தவத்தை மன்மதன் அழிக்கப் புகுந்து அவரது நெற்றிக் கண்ணுக் கிரையானன். இவ்வாச் சிரமத்தை மூவருங் கடந்ததும் பாலைவனத்தைக் கண்டார்கள். அவ் வனம் வெறும் நெருப்பு மயமாயிருந்தது. அரசிளங் கோமக்கள் அதில் வருந்துவார்கள் என்று நினைத்து முனிவர் அவர்களுக்கு நடைப்பிணி பசிப்பிணி முதலிய துன்பங்க ளணுகாதபடி சில மந்திரோப தேசங்களைச் செய்து, ஆயுதங்கள் பல வழங்கி அவற்றைப் பிரயோகிக் கும் முறையையுங் கற்பித்தார்.

அப்போது ஸ்ரீராமன் முனிவரை நோக்கி "சுவாமி எங்கள் தந்தையின் குற்றமற்ற அரசாட்சியில் இப்படியும் ஒரு பாழ் நிலம் இருக்கின்றதே" என்றான். முனி வர் "அப்பா! பெரும்பழியும் போரற்றலும் படைத்த அரக்கி ஒருத்தி இங்கிருக்கிறாள். அவளுடைய கொடிய செயலை நினைத்தாலும் எனக்குப் பயமாயிருக்கிறது. அவளால் சாதுக்கள் உட்பட எவ்வளவோ உயிர்கள் மாண்டொழிய நேர்ந்தன" என்றார். "அவள்யார்?" என்று வினவினன் ஸ்ரீராமன். அதற்கு முனிவர் "*ஆட வர் பெண்மையை அவாவுந்தோளினாய், தாடகை என்பதச் சழக்கி நாமமே" என்று அவள் வரலாற்றை விஸ்தரித்துச்

---

* ஆடவர்-புருஷர்கள், பெண்மையை-உன்னைக் கண்ட மாத்திரத்தில் உன் சௌந்தரியத்தி லீடுபட்டு நாம் பெண்பாலரா யில்லாமற் போனோமே இப்புருஷோத்தமனைத் தழுவ என்று நினைத்து அப்பெண் தன்மையை, அவாவும்-விரும்பும், தோள்-புஜம்—

விஸ்வாமித்ர யாக ஸம்ரக்ஷணம்.

சொன்னார். இதற்குள் அவளும் * "மைவரை நெருப் பெரிய வந்ததென வந்தாள். முனிவர் " இராமா! இதோ வந்துவிட்டாள்; உடனே உன் கைவில்லால் அவளைக் கொன்று எங்களைக் காப்பாற்று" என்றார். "ஐயோ பெண் பாலாயிருக்கிறளே" என்றான் ஸ்ரீராமன்.

முனிவர்,

† " தீதென்றுள்ளன யாவையும் செய்தமைக்
கோதென்றுண்டிலள் இத்தனையே குறை
யாதென்றெண்ணுவதிக்கொடியாளையும்
மாதென்றெண்ணுவதோமணிப் பூணினாய்"

என்றார்.

உடனே ஸ்ரீராமன் குருமொழியைக் கடக்கலாகா தென்று அந்த அரக்கியின்மீது பாணத்தை விட்டான். அது அவளுடைய வயிரமலையை யொத்த மார்பைப் பிளந்து வெளியேறியது. அவளும் மாண்டொழிந்தாள்.

இந்த இடத்தில் நாம் கவனிக்கவேண்டிய விஷய மொன்றிருக்கிறது. அதாவது இராமபாணத்தின் மகத் துவமாம். இந்த மகத்துவம் வேறெவருடைய பாணத் துக்குமில்லையென்பது மிக்கோர் துணிபு. தனது தேரைப் பத்துத்திக்கிலுஞ் செலுத்திச் சம்பராசுரன்

---

* மைவரை-நீலமலை, நெருப்பெரிய-அக்கினிச் சுவாலையை வீசிக்கொண்டுவர—

† உலகத்தில் குற்றங்களென்று நிச்சயிக்கப்பட்ட அவ்வள வையும் செய்துமுடித்து என்னைப்போன்ற மகரிஷிகளைப் பசையில்லாதவர்களென்று தின்னாமல் கழித்துவிட்டாள். இது தான் அவள் செய்துள்ள லாபம். இத்தன்மையளான இத் துஷ்டையை என்னவென்று நினைக்கலாம்? பெண்ணென்று எண்ணலாமா? இரத்னாபரணங்களைப் பூண்ட ஸ்ரீராமா—

முதலிய அரும்பெரும் பலசாலிகளை யெல்லாம் வென்று பிரஜைகளைக் காத்துவந்த தசரதசக்ரவர்த்தியே தாடகையைக் கவனித்துக்கொல்லாமல் வாழவிட்டாரென்றால் மற்ற அரசர்களது வில்லின் திறத்தைச் சொல்லவேண்டுமா? வயிரத்தை வயிரத்தாலன்றி வேறெதனாலும் சேதிக்க முடியாதல்லவா? அதற்கொப்பான தாடகையின் மார்பை இராமபாணம் ஒன்றே வென்றது அறியத்தக்கதாம்.

தாடகை யிறந்தது கண்ட தேவர் முதலியோர் சந்தோஷக்கடலில் முழுகி ஸ்ரீராமபிரானைத் துதித்து வாழ்த்தினார்கள்.

—(வரும்.)

நீதி

நோயற்றவனே சுகஜீவியாவான். இதனாலேதான் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று சொல்கின்றனர். நோயில்லாமல் வாழவேண்டுமானால், மனம்போனவழியில் போவது கூடாது. இதனாலேதான், "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று போதித்தார்கள் பெரியோர்கள். குதிரையைப் பாகன் நிலமறிந்து செலுத்துவான். அதுபோல் மனத்தை இடமறிந்துசெலுத்தும் அறிவுடையவனாயிருத்தல் வேண்டும். ஆகையினால் மனம்போனவழியிலே போகாமல் மருத்துவநூல் அல்லது சுகநூல் கூறுகிறவழியில் செல்லுகிறவர்கள் கூடுமானவரையில் நோயில்லாமலே வாழக்காண்கிறோம். தூண்டிமுள்ளிலுள்ள சிறு இரைச்சிக்கு ஆசைப்பட்ட மீன் அதிலிருந்து மீள வழியறியாமல் துன்புறுவதுபோல் ஆசைப்பட்டு அளவுக்குமிஞ்சி உணவினை யுண்பவர் பிணியிலிருந்து நீங்க வழியறியாமல் இடர்ப்படுவாரென்றுணர்க.

பொய்ம்மை

பொய்ம்மையே பாவமெல்லாம் விளைதரு பூமியாகும்
பொய்ம்மையே பிறவியெல்லாம் புகப்புரி வித்துமாகும்
பொய்ம்மையே வறுமையெல்லாம் போதரப் புரிவதாகும்
பொய்ம்மையே நரகமெல்லாம் புகுதரப் புகுத்தா நிற்கும்.

ஒரு புழுவின்

186462
-600 008

அழகான ஒரு புழு நகர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. இதன் சரீரத்திலே ஒரு மேடுபள்ளம் கிடையாது. கோணல் வளைவு கிடையாது. கொம்பு, மயிர் ஒன்று மில்லை. மிகவும் மிருதுவானது. சரீரத்தில் சிறிதேனும் சரசரப்புக்கிடையாது.

இத்துடன் இந்தப் புழு சிறந்ததோர் ஞானி.

"சென்றது கருதார் நாளைச்சேர்வது நினையார"

என்ற லக்ஷணப்படி முன்பின் கவலையே இதற்கில்லை. அவசரப்படவே செய்யாது.

'பதறின காரியம் சிதறும்'

என்று புழுவுக்கு நன்றாகத் தெரியும். பல சாஸ்திரங்கள் படித்திருக்கிறது.

அதுவுந்தவிர, மிகவும் கீர்த்திபெற்ற குலத்திலே பிறந்தது. இதன் சுற்றத்தார்களிலே பலர் நேர்த்தியான இறகுகள் படைத்தவர்களாய் வானத்திலே பறந்து ஆகாச தத்துவங்களையெல்லாம் உணர்ந்து புகழ்பெற்றிருக்கிறார்கள். உயர்ந்த மரக்கிளைகளின் மீது சென்று பூக்களிலுள்ள தேனைப்பருகி பிரமானந்த மடைந்ததாகச் சரித்திரமிருக்கிறது.

இந்தப் புழு பட்டுப்பூச்சி கோத்திரத்தில் வண்ணாத்திப் பூச்சி சூத்திரத்தில் பிறந்தது.

இத்துடன், இதற்கு ஸத்வ குணம் அதிகம். கிடைத்ததையுண்ணும். ஆஹாரத்திற்காக மற்றொரு உயிரைக் கொலை செய்யாது. 'அஹிம்ஸா: பரமோ தர்ம:' என்ற வேதவிதிப்படி நடந்துவருகிறது.

இப்படியிருக்கையில், ஒருநாள் ஒரு சிற்றெறும்பு இதைவந்து பார்த்தது. சிற்றெறும்பு கொஞ்சமேனும் அழகில்லாத ஜந்து. அதன் உடலிலே சதைப்பற்றுக் கொஞ்சமேனும் கிடையாது. ஒரு உருவமா, கணக்கா ஒன்றுமில்லை. கடுகிலுங் கடுகத்தனை குண்டுத் தலையும் மேடுபள்ளமான உடலுமாய்ப் பார்வைக்கு மிகவும் விகாரத்தன்மைகொண்டது. மேற்குலத்திலே பிறந்ததில்லையாகையால் 'சுகசரீரி' யன்று.

தாழ்ந்த குலத்தில் பிறந்த ஜந்து. இதற்கு வித்தையும் ஞானமுமில்லை. எப்போதும் முயற்சி. எப்போதும் சலனம். இப்போது வயிறு நிறைந்த போதிலும் உடனே புறப்பட்டு நாளைக்கு உணவு தேடும். கோடை நாளிலேயே மாரிகாலத்துக்கு உணவு தேடி வைக்கும். அவஸரம், அவஸரம் எப்போது பார்த்தாலும் அவஸரந்தான் இதனுடைய இயற்கை.

இந்தச்சிற்றெறும்பின் தூரபந்துக்களில் சிலருக்குச் சிறகு முளைத்திருப்பது வாஸ்தவமாயினும், அவை வண்ணத்திப்பூச்சி, பட்டுப்பூச்சி இவற்றின் சிறகுகளைப்போல அதிக உயரம் பறப்பவையல்ல. அழகும் சக்தியுமில்லாத இறகுகள். தேனுண்டு பார்க்காதவைகள்.

எறும்புக்குலத்தில் யாருமில்லை. நீசஜாதி தானே; சவம்-இதற்கு கோத்திரமே கிடையாது. தவிரவும் இதற்கு ஸத்வகுணம் கிடையாது. கோபமும் குரூ

விருத்தியும் அதிகம். தன் உணவுக்காக எதையும் கொன்று விடும். நிற்க இந்தச் சிற்றெறும்பு நெருங்கிவந்தவுடனே புழு அதனை நோக்கி 'தூரவிலகிப் போடா! கிட்ட வராதே' என்றது.

"என்ன விகாரமான ஜந்து, குச்சியைப்போலிருக்கின்றது, சவம்! அழகா, அந்தமா ஒன்றுமில்லை. தூர்க்குணக் களஞ்சியம் அஞ்ஞானப் பிண்டம்! பகவான் நம்மை சிருஷ்டியிலேயே உயர்வாகப் படைத்திருக்கிறார். ஜன்மாந்திர சுக்ருதம். நமக்கு எல்லா ஜீவர்களிலும் தயை அதிகமானபோதிலும், இந்த எறும்பைப் போன்ற ஹீனஜாதிப்பயல்கள் கிட்டவரும்போது கோபம் வரத்தான் செய்கிறது. மேன்மை, தாழ்வு சாஸ்திரங்களாலேயே வகுக்கப்பட்டிருக்கிறபோது அதை நம்மால் எப்படி மாற்ற முடியும்?" என்று மனதில் நினைத்துக் கொண்டது. இதற்குள், சிற்றெறும்பு அனுமதி யில்லாமலே சமீபித்து விட்டது.

புழு, கோபத்துடன், 'எங்கே வந்தாயடா? என்று கேட்டது.

சிற்றெறும்பு;— 'உன்னைத்தின்னும் பொருட்டாக வந்தேன்' என்றது.

"அட. சவமே, நம்முடைய சரீரத்தின் அளவெத்தனை? உன்னுடைய ஆகிருதியெத்தனை? உன்னை ஒரு க்ஷணத்தில் நசுக்கிப் போடுவேன். என்ன துணிச்சல்! என்ன துணிச்சல்!! என்று புழு ஆச்சரியத்துடன் சொல்லி 'விலகிப்போ' என்று கட்டளையிட்டது. இதற்குள் எறும்பு புழுவின் சரீரபத்தியைத் தனது சிறிய பற்களில் கடித்துப்பற்றிக் கொண்டது. 'சண்டாளப்

பயலே, விடடா, விடடா, நீ நாசமாகப்போக' என்று புழு கூச்சலிட்டது. உடலை மாறி மாறி வளைத்தது. சிற்றெறும்பு ஒன்றையும் கவனிக்கவில்லை. அப்பால் புழு சிற்றெறும்பைக் கெஞ்சத் தொடங்கிற்று.

"என்னப்பனே, ரொம்ப நோகிறதடா! உனக்குக் கோடிபுண்ணிய முண்டு விட்டு விடடா, நோவு பொறுக்க முடிய வில்லையடா.!" என்று பிரார்த்தனைகள் செய்து பார்த்தது.

எறும்பு இதைக்காதில் வாங்கிக்கொள்ளவே யில்லை. தனியாக இழுப்பது சிறிது சிரமமாக இருந்த படியால், சிற்றெறும்பு இதைவிட்டுப் போய்விட்டது.

உடனே புழு:—'தொலைந்தான் தாசிமகன்! ஏதோ நம்முடைய பூர்வபுண்யம் இன்று பிழைத்தோம்.' என்று பலவிதமாக ஆலோசனை செய்துவிட்டுப் பிறகு பக்கத்திலே யிருந்த தண்ணீரில் போய் நீசன் தொட்ட தீட்டு தீர்ந்துபோகும் பொருட்டாக ஸ்நாநம் செய்துவிட்டுக் காயத்திரி ஜபம் பண்ணிக் கொண்டிருந்தது.

இதற்குள் நான்கு சிற்றெறும்புக்கள் ஸஹிதமாக பழைய சிற்றெறும்பு வந்து சேர்ந்தது, புழு காயத்திரி ஜபத்தை விட்டுவிட்டு, நடுங்கத் தொடங்கி விட்டது. எறும்புகளுக்குள்ளே ஐக்கியமுண்டு. ஒன்றுக்கு நான்கு ஸஹாயமாகவரும். புழுக்களுக்குள் அப்படியில்லை. ஒரு புழுவை மற்றொரு புழு கவனிக்கவே செய்யாது.

'நம்முடைய நித்ய நைமித்தி கானுஷ்டானங்களை நாம்கவனிக்க வேண்டாமோ? அவனவனுக்கு வேலையில்லையோ? அவனவன் பூர்வ கர்மானுஸாரம் அவனவன் கஷ்டப் படுகிறான். அவனுக்கு நாம் துணைசெய்யப்

போனல், நமக்கும் ஏதேனும் துன்பம் வரக்கூடும். ஆகா சத்திலே போகிற சனியை ஏணியை வைத்து எவன் கூட்டி வருவான். நமது பாட்டை நாம் பார்க்கவேண்டும்' என்பதாகவே ஒவ்வொரு புழுவும் சித்தாந்தஞ் செய்து கொண்டு சும்மா இருந்துவிடும்.

ஆதலால், புழுவுக்கு யாரும் துணைவரவில்லை. ஐந்து சிற்றெறும்புகளாகவந்து இதைக் கொன்று தின்று விட்டது.

படிப்பவரே, நீர் எறும்பைப் போலிருப்பது நல்லதா, புழுவைப் போலிருப்பது நல்லதா! தயவு செய்து யோசனை செய்து பாரும்.

"கர்மயோகி".

பகல் தூக்கம்

ஒரு வேந்தன் ஜனங்களைத் துன்பப்படுத்திவந்தான். அவனிடம் ஒரு பெரியவர் வந்தார். அவன் அவரைப்பார்த்து "ஸ்வாமி நான் எப்படி நடந்துகொள்ளவேண்டும்?" என்று கேட்டான். பெரியவர். "வேந்தே நீ பகலில் தூங்குவது மேலானகாரியம். உன்னை அப்பொழுது உன் குடிகள் வாழ்த்துவர். உனக்குப் புகழுண்டாகும்" என்றார். அவன், "ஸ்வாமி அதேனப்படிச் சொல்லுகிறீர்கள். பகலில் தூங்குவது எப்படி நன்மைதருவதாகும். பகலில் தூங்குவதாகாதென்று சொல்லக் கேட்டிருக்கிறேனே" என்றுகேட்டான். பெரியவர் "நீ பகலில் தூங்கினல் உன் குடிகள் துன்பமடையாமலிருப்பார்கள். துன்பமில்லாதபோது அவர்கள் உன்னை வாழ்த்துவார்களல்லவா? அதனல் சொன்னேன்" என்றார். அரசன் கேட்டுத் திருந்தினன்.

186462
சென்னை-600 008

மனத்தின் தத்துவம்

ஒரு குடியானவன் வெற்றிலைத் தோட்டம் போட்டிருந்தான். அவன் நாள்தோறும் தன் தோட்டத்திற்குப் போய் வெற்றிலை கிள்ளிக்கொண்டுவந்து கடைக்காரர்களுக்குப்போட்டு ஜீவித்துவந்தான். ஒருநாள் ஒருவருடைய வீட்டில் கல்பாணம் வந்தது. அதற்காக அந்த வீட்டுக்காரர், பத்துக்கட்டு வெற்றிலை கொண்டுவரும்படி குடியானவனுக்கு முன் பணந்தந்தார். குடியானவன் முதல்நாள் விடியற்காலத்திலேயே எழுந்து வெற்றிலைத் தோட்டத்துக்குப் போய் வெற்றிலை கிள்ளிச் சூரியனுதிப்பதற்குள்ளே பத்துக்கட்டு வெற்றிலையைச் சேகரித்துவிட்டான். பத்துக்கட்டையும் கட்டி முடித்தபின், வழக்கப்படி கொடுக்க வேண்டியவர்களுக்கு வெற்றிலை கிள்ளினான். அப்பொழுது வெற்றிலைக்கொடி படர்ந்திருந்த ஆத்திமரத்தின் மீதிருந்த ஒரு ஸர்ப்பம் அவனைக் கடித்தது ஸர்ப்பத்தை அவன் பார்க்கவில்லை. ஏதோ முள் குத்தி விட்டதென்று நினைத்துக் கிள்ளவேண்டிய வெற்றிலையைக் கிள்ளிக் கட்டி முன் சேகரித்த பத்துக்கட்டுடன் சேர்த்துத் தலையின்மீது பெருமூட்டையாய்த் தூக்கி வைத்துக்கொண்டு ஊருக்குள்போய்க் கல்யாணவீட்டுக்குக் கொடுக்கவேண்டிய வெற்றிலையைக் கொடுத்தான். கல்யாண வீட்டுக்காரன் இன்னொரு கட்டுவெற்றிலை வேண்டுமென்று கேட்டான். குடியானவன் அதைக் கொண்டு வந்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு மற்ற வெற்றிலையை